செ.வெ.எண்-13 நாள்-06.03.2021

# அரியலூர் மாவட்டம்

## சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் ஆய்வு.

அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட 149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் பதிவாகும் வாக்குகள் அனைத்தும் எண்ணும் வகையில் கீழப்பழூர் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் அமைக்கப்பட்டு வரும் வாக்கு எண்ணும் மையம் மற்றும் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் இருப்பு வைப்பதற்கான பாதுகாப்பு அறைகளையும் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (06.03.2021) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ஐ முன்னிட்டு 149.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படவுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள இருப்பு அறையில் பாதுகாப்பாக வைக்கப்படவுள்ளன. இவ்விருப்பு அறையில் பாதுகாப்பாக வைக்கப்படவுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது சின்னங்கள் பொறுத்தும் பணிகள் நடைபெறுவதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், அரியலூர் மாவட்டத்திற்குட்டபட்ட 149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் பதிவாகும் வாக்குகள் அனைத்தும் கீழப்பழூர் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் எண்ணப்படவுள்ளன. வாக்கு எண்ணும் பணிகள் மற்றும் வாக்கு பதிவு இயந்திரங்களை பாதுகாப்பான முறையில் வைப்பதற்கான இருப்பு அறைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் தலா பாதுகாப்பு அறை, வாக்கு எண்ணும் அறை, தேர்தல் நடத்தும் அலுவலருக்கான அறை, பாதுகாப்பு அலுவலருக்கான அறை மற்றும் செய்தியாளர்களுக்கான ஊடக மையம் ஆகியவை அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்படவுள்ள வாக்கு பதிவு இயந்திரங்களுக்கு பாதுகாப்பு அளிப்பது, வாக்கு எண்ணும் பணிகளில் ஈடுபடவுள்ள பணியாளர்கள் மற்றும் வாக்கு எண்ணும் நிகழ்வுகளில் கலந்துகொள்ள உள்ள அரசியல் கட்சி முகவர்கள் ஆகியோர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலுக்கு தேவையான வசதிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், கோட்டாட்சியர்கள் ஏழுமலை (அரியலூர்), அமர்நாத் (உடையார்பாளையம்), செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி முகமை) ராஜராஜன், வட்டாட்சியர்கள் ராஜமூர்த்தி (அரியலூர்), கலைவாணன் (ஜெயங்கொண்டம்), முத்துகிருஷ்ணன் (ஆண்டிமடம்) மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**